2015 செப்டம்பர் 2]

திருமதி செல்வி ராமஜெயம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான அனுமதி பெற்று, நான் கேட்டுக் கொண்ட 5 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கும் தானிய சேமிப்புக் கிடங்குகள் அமைத்துக் கொடுக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக மீண்டும் ஒரு முறை நன்றியைக் கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 201, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன், மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

201—

அன்னதானத் திட்டம்

*20663 — **திரு. வே. குணசீலன்:**

மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, வந்தவாசியிலுள்ள அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் மற்றும் ரங்கநாதப் பெருமாள் திருக்கோயிலில் அன்னதானத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் மற்றும் ரங்கநாதப் பெருமாள் திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாததால், தற்பொழுது அன்னதானத் திட்டம் செயல்படுத்தும் அவசியம் ஏற்படவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன் அவர்கள்.*

திரு. வே. குணசீலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் இதய தெய்வம், காவல் தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களே, தங்களை அரசியலில் எதிர்கொள்ள முடியாத கோழைகள் எல்லாம் பொய் வழக்கு போட்டு எக்காளமிட்டார்கள். தருமம் மீண்டும் வென்று, இதய தெய்வம் அம்மா அவர்கள் மீண்டும் ஐந்தாவது முறையாக தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்று, (மேசையைத் தட்டும் ஒலி) அமைதி, வளம், வளர்ச்சி என்கின்ற தாரக மந்திரத்தை மக்களுக்கு அளித்தீர்கள். உலக வரலாற்றில் ஆர்.கே. நகர் தொகுதியில் தங்களை சரித்திர சாதனையுடன் வெற்றி பெற வைத்த ஆர்.கே. நகர் தொகுதி மக்களுக்கு நன்றியைக் காணிக்கையாக்கிக்கொள்கிறேன். அம்மா, தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும் என்பதெல்லாம் இயேசுவின் பொன்மொழிகள். கேட்காமலேயே பல அரிய திட்டங்களை மக்களுக்கு வாரி வழங்கிய வள்ளல் அம்மா நீங்கள். காவேரியை மீட்டுத் தந்த காவியத் தலைவியே, தங்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதி, வந்தவாசி நகரத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் மற்றும் ரங்கநாதப் பெருமாள் திருக்கோயிலில் உள்ள தேர்ச் சக்கரத்திற்கு அரசு சார்பிலே 12 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் என மதிப்பீடு செய்யப்பட்டது. பொதுமக்கள் சார்பிலே இரண்டு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் தேர்ச் சக்கரத்திற்காக வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 10 இலட்சம் ரூபாயை அரசு சார்பிலே வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருக்கோயிலுக்கு 1,500 பக்தர்கள் தினசரி வருவதால், அன்னதானத் திட்டத்தைத் தொடங்கி வைக்க வேண்டுமென்று தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருப்பணிக்காக நிதி ஒதுக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். ஆய்வுகளின் அடிப்படையில், தேவையின் அடிப்படையில் நிதி ஒதுக்கப்படும் என்பதை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் திருக்கோயிலுக்கு அன்னதானத் திட்டத்தை வலியுறுத்திக் கேட்கிறார்கள். ஆன்றோரும், சான்றோரும் பாராட்டுகிறவகையில் தமிழகத்தில் 518 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டத்தைச் செயல்படுத்தியவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக நாள் ஒன்றுக்கு 10 இலட்சம் ரூபாய் செலவாகிறது. ஒவ்வொரு நாளும் 50,000 பேர் இத்திட்டத்தின் மூலமாகப் பயன்பெற்று வருகிறார்கள்.

முற்பகல் 10-30

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு அம்மா அவர்கள் ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில் மற்றும் பழனி, தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் ஆகிய 2 திருக்கோயில்களிலும், நாள் முழுவதும் அன்னதானத் திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில், நாள் ஒன்றுக்கு 2 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டு, 8 ஆயிரம் பக்தர்கள் அங்கே உணவு அருந்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் இந்த அவைக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் மற்றும் ரங்கநாதப் பெருமாள் திருக்கோயிலிலும் அன்னதானத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீண்டும் வலியுறுத்திக் கேட்டிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, எதிர்வரும் காலத்தில், பக்தர்களின் வருகையைக் கணக்கில்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 202, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சந்திரசேகர், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.